வெளியீடு எண் 56.

சகல கலா வல்லி மாலை

(மூலமும் உரையும்)

விலை அணா 1. தருமபுர ஆதீனம்.



திருக்கயிலாய பரம்பரைத் திருத் தருமபுர ஆதீனம்

21-வது மகா சந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

குருபாதம்

குமரகுருபரசுவாமிகளியற்றிய

சகல கலா வல்லி மாலை

மூலமும்

தருமபுர ஆதீன
24-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகளின் ஆக்ஞைப்படி

திருச்சி, பொன்னையா உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்,
வித்துவான், திரு. தி. பட்டுசாமி ஓதுவாரவர்கள்
இயற்றிய உரையும்

திருபுவனம் ஸ்ரீ கம்பஹரேசுவரசுவாமி
தேவஸ்தானம் கட்டளைவிசாரணை
ஸ்ரீ சுந்தரலிங்கத்தம்பிரான் சுவாமிகளால்
வெளியிடப்பெற்றது.

1943.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

முகவுரை

'சகலகலாவல்லிமாலை' என்னும் இப்பிரபந்தத்தை இயற்றியவர் **ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள்** ஆவர். இவர் பாண்டி நாட்டில் ஸ்ரீ வைகுண்டம் என்னும் கைலாசபுரத்தில் இற்றைக்குச் சுமார் 300-ஆண்டுகட்குமுன் சைவவேளாளர் குலத்தில் சண்முக சிகாமணிக் கவிராயரும், சிவகாமியம்மையாரும் செய்த தவப்பயனால் உதித்தவர்; முருகப்பெருமான் அருள்பெற்றவர்; ஓதாதுணர்ந்த உத்தமர்; புலமை படைத்தவர்; கவித்துவமும் தெய்வசக்தியும் வாய்ந்தவர்; மதுரையில் ஆட்சி புரிந்த திருமலை நாயகரால் நன்குமதிக்கப் பெற்றவர். இவரது ஞானசிரியர் தருமையாதீனம் 4-வது பட்டம் ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் ஆவர். இவரிடத்து மிகுந்த அன்பும் பக்தியும் கொண்டவர்; பற்றற்ற துறவியுமாவர்.

இஞ்ஞானசிரியரின் பணியை மேற்கொண்டு இப்பெரியார் காசிக்குச்சென்று சைவசமயத்தை வளர்த்தனர். சைவசமய வளர்ச்சிக்கு அரசனது உதவியைப்பெற நினைத்தார். அவ்வரசன் முகம்மதியன் ஆவன். அவனோடு பேச இந்துஸ்தானி

பாஷை தெரியவேண்டுமே என்று குருவருளை சிந்தித்தார். அப்போது சகல கலா வல்லி மாலை என்னுமிந்நூலை இயற்றித் துதித்துக் கலைமகளின் அருளைப் பெற்று, அப்பாஷையை யறிந்தார். உடனே அங்கிருந்த பாதுஷாவிடம்சென்று, பல அற்புதங்களை நிகழ்த்தி அவனது உள்ளத்தைக் கவர்ந்தார். பின்பு எண்ணியதை எண்ணியவாறு எளிதில் அடைந்து சிறப்புடன் விளங்கினார். காசியிலே ஒருமடம் ஏற்படுத்தி அதிலே சிலகாலம் வசித்திருந்து, வைகாசி மாதத்திலே கிருஷ்ண பக்ஷத் திருதியையிலே இறைவன் திருவடி நீழலிற் கலந்தருளினர்.

இவர் இயற்றிய நூல்கள்:- கந்தர்கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை யிரட்டைமணிமாலை, மதுரைக்கலம்பகம், நீதிநெறிவிளக்கம், திருவாரூர் நான்மணிமாலை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ், சிதம்பரம் மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, சிவகாமியம்மை யிரட்டைமணி மாலை, பண்டார மும்மணிக்கோவை, காசிக்கலம் பகம், சகல கலா வல்லி மாலை, கயிலைக்கலம்பகம் என்பவைகளாம்.

இந்நூலின்கண் உள்ள பத்துப்பாடல்களும் சொற்சுவை, பொருட்சுவை நிறைந்த கட்டளைக் கலித்துறைகளாகும். இவைகளை நடோறும் பாரா யணம் செய்வோர் கலைமகள் அருளும், கல்விவள

மும், கவித்துவமும், பேசுந்திறமையும் பெற்றுப் புகழுடன் விளங்குவர் என்பது திண்ணம். இதற்குச் சான்று இந்நூலாசிரியரே ஆவர்.

இந்நூலுக்குப் பல பெரியார்கள் எழுதிய குறிப்புரை முதலியன இருப்பினும், அவை கற்றோர்க்கே மிகப் பயன்படுவதாகும். மற்றவர்களும் எளிதில் பொருளுணர்ந்து பாராயணம் செய்வார்களானல் கலைமகளின் அன்பிற்கு விரைந்து ஈடுபடுவார்கள் என்று திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்தில் 24-வது அருட்குருமூர்த்தியாய் எழுந்தருளி அருட்செங்கோல் நடாத்துகின்ற **ஸ்ரீ-ல-ஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** திருவுளம் பற்றினர்கள். அவர்களது திரு ஆணையை சிரமேற்றாங்கி இந்நூலுக்குப் பதவுரை முதலியன வரைந்தேன்.

ஸ்ரீ-ல-ஸ்ரீ சந்நிதானமவர்கள் இதுவரை பல அறப்பணிகள் செய்து வருவதுபோல அவ்வாதீனத்தில் இதனையும் அச்சியற்றி வழங்க முன்வந்த கருணைப் பெருக்கை நம்நாடு வாழ்த்தக் கடப்பாடுடையது. ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் திவ்ய திருவடி என்றும் நின்று நிலவுக.

வரகநேரி,
திருச்சிராப்பள்ளி,
10—9—42.

இங்ஙனம்,
தி. பட்டுசாமி ஓதுவார்.



உ

சிவமயம்

சரசுவதி தோத்திரம் என்னும்

சகல கலா வல்லி மாலை

மூலமும் உரையும்

வெண்டா மரைக்கன் றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

இதன்பொருள். சகம் ஏழும் = (கீழும் மேலுமாகிய இரு வகைப்பட்ட) ஏழு உலகங்களையும், அளித்து = பாதுகாத்து, உண்டான் = (இறுதிக்காலத்தில் அவ்வுலகங்களை யெல்லாம்) உண்டு (தன்வயிற்றில்) அடக்கியவனாகிய திருமால், உறங்க = (திருப்பாற் கடலிலே) பள்ளி கொள்ளவும், ஒழித்தான் = (எல்லாவற்றையும்) அழித்தவனாகிய உருத்திரன், பித்து ஆக = பித்துக்கொள்ள வும், உண்டாக்கும் வண்ணம் கண்டான் = படைக்குந் தொழி லொன்றினையே மேற்கொண்டவனாகிய பிரமன், சுவை கொள் கரும்பே = சுவையுள்ள பொருளாகக் கொள்கின்ற கரும்பு போன் றவளே!, சகல கலா வல்லியே = சகல கலைகளாகிய மலர்கள்

அலர்ந்த கொடி போன்றவளே!, நின் பதம் தாங்க=உன் திருவடியைத் தாங்குவதற்கு, வெண் தாமரைக்கு அன்றி=வெண்டாமரை மலருக்கு அல்லாமல், என் வெள்ளை உள்ளம்=எனது மாசற்ற மனமாகிய, தண் தாமரைக்கு=குளிர்ந்த தாமரை மலருக்கு, தகாது கொலோ=தகுதியாகாதோ? (தகுதி ஆகும்; ஆதலின், நீ என் மனத்தின்கண் எழுந்தருளி அருள்புரிவாயாக.)

விளக்கவுரை:-

ஆசிரியர் கலைமகளை நோக்கி நீ வெண்டாமரையில் வீற்றிருத்தல் போல எனது வெள்ளை யுள்ளத்திலும் வீற்றிருத்தல் தகுதியாகும் என்று வேண்டுகிறார். வெள்ளை யுள்ளம்=அறிவின்மையையுடைய மனமுமாம். சகம்=தோன்றி நின்று அழியும் தன்மையுடையது; உலகம். சகம் எழும் என்றமையால் மற்றைய உலகங்களையும் கொள்க. திருமால் மகாப்பிரளய காலத்தில் பதினான்கு உலகங்களையும் தன் வயிற்றடக்கிக் காத்தலின் சகமேழு மளித்துண்டான் என்றும், அதன்பின் அவர் திருப்பாற்கடலிலே பள்ளி கொள்வதனால் உறங்க என்றும் கூறினார். உருத்திரன் சங்காரக் கடவுள் ஆதலின் அவரை ஒழித்தான் என்றும், அவர் உலகிற்கு மாறாக அரவம், என்பு, எருக்கு, ஊமத்தை முதலியவற்றை அணிந்து பித்தர் போன்று இருத்தலின் பித்தாக என்றும் கூறினார்.

மும்மூர்த்திகளில் திருமாலும் உருத்திரனும் தத்தம் தொழிலால் முறையே தூங்கியும், பித்தாகியும் சென்றார்கள்; பிரமன் அவ்வாறு இன்றி படைத்தல் தொழிலை மேற்கொண்டான் என்பார், உண்டாக்கும் வண்ணம் கண்டான் என்றார். கலைமகள் நாவிற்கும் மனத்திற்கும் இனிமை பயப்பவள் ஆதலின் அவளைக் கரும்பே என்றார்.

சகல கலா வல்லி=சகல கலைகளுக்கும் அதிதேவதை; சரசுவதி. சகல கலைகளிலும் வல்லவள் எனினுமாம். இச் செய்யுளில் பிரமதேவனுக்கு உயர்வு தோன்றும்படி சொல்லமைதி இருத்தல் காண்க.

இலக்கணக்குறிப்பு:—

வெண்மை+தாமரை=வெண்டாமரை. தண்மை+தாமரை=தண்டாமரை. தாமரை பொருளாகு பெயர். தகாதுகொலோ ஓ எதிர்மறை. உண்டான், ஒழித்தான், கண்டான் வினையாலணையும் பெயர்கள். கொள் கரும்பே வினைத் தொகை. கரும்பு உவமையாகுபெயர். சகல கலாவல்லி ஒரு சொல்லின் றன்மைப்பட்டு வந்த தொடர் மொழி. கலா என்பது கலை எனத் தற்பவமாயிற்று. வல்லி கொடி; கொடி என்பது பெண்ணுக்கு உவமையாகு பெயர். (க)

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

இ-ள். பங்கயம் ஆசனத்தில்=வெண்டாமரையாகிய இருக்கையில், கூடும்=எழுந்தருளியிருக்கின்ற, பசும் பொன் கொடியே=பசிய பொன்போலும் அழகிய கொடிபோன்றவளே!, கனம்

தனம் குன்றும் = பருத்த கொங்கைகளாகிய மலைகளையும், ஐம்பால் காடும் = ஐந்து பகுப்பால் முடிக்கும் கூந்தலாகிய காட்டையும், சுமக்கும் கரும்பே = தாங்குகின்ற கரும்பு போன்றவளே!, சகல கலா வல்லியே = சகல கலைகளாகிய மலர்கள் அலர்ந்த கொடிபோன்றவளே!, நாடும் = (புலவர்களால்) விரும்பப்படுகின்ற, பொருள் சுவை = பொருளின் சுவையும், சொல் சுவை = சொல்லின் சுவையும், தோய்தர = பொருந்த, நால் கவியும் = நால்வகைக் கவிகளையும், பாடும் பணியில் = பாடுகின்ற தொழிலில் (நான் திறமைபெறும்படி), பணித்தருள்வாய் = (நீ) கட்டளையிட் டருள்வாயாக.

விளக்கவுரை:-

பொருட்சுவை—சிறந்த கருத்தினைக் கண்டபோது உண்டாகும் இன்பம். சொற்சுவை—கருத்தினை மிகப் புலப்படுத்தும் செஞ்சொல்லைக் கண்டபோது உண்டாகும் இன்பம். நாற்கவி—ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகிய நான்குவகைச் செய்யுள்; ஐம்பால்—ஐந்துவகையாக முடிக்கப் பெறும் கூந்தல். அது சுருள், குழல், கொண்டை, பனிச்சை, முடி என்பன. பால்—பகுப்பு. சுருள்—மயிரைப் பின்னேசேர்த்துச் சொருகுதல். குழல்—சுருட்டி முடித்தல். கொண்டை—பக்கத்தில் சேர்த்து முடித்தல். பனிச்சை—பின்னி விடுதல். முடி—உச்சியில் முடித்தல்.

பங்கயம்—பங்கஜம், சேற்றில் முளைப்பது. பங்கம் = சேறு. ஜம் = உற்பத்தி. ஆசிரியர் தன்னைப்பாடுந் தொழிலில் ஈடுபடுத்த வேண்டு மென்பார் பாடும் பணியிற் பணித்தருள்வாய் என்றார். இங்கு, "பாடும் பணியே பணியாவருள்வாய்" என்னும் கந்தரனுபூதியடி நோக்கத்தக்கது. இச் செய்யுளில் கரும்பு குன்றையும், காட்டையும் சுமந்

திருத்தலும், பங்கய மலரிலே கொடி யிருத்தலும் ஒரு வியப்பாம்.

இலக்கணக்குறிப்பு:—

பங்கய + ஆசனம் = பங்கயாசனம்; தீர்க்க சந்தி. கொடி, கரும்பு உவமை யாகுபெயர். பணித்தருள்வாய் முன்னிலை ஏவல் ஒருமை வினைமுற்று. நான்கு + கவி = நாற்கவி. பசுமை + பொன் = பசும்பொன். பொற்கொடி மூன்றும் வேற்றுமைத் தொகை. குன்றும் காடும் உம்மைகள் எண்ணுப்பொருளன. (உ)

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோஉளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

இ-ள். உளம் கொண்டு = சித்தத்தால் ஆராய்ந்து, தெள்ளி தெளிக்கும் பனுவல் = (பிறர்க்குத் தாம் கண்டபொருளை) மிகத்தெளிவாகப் போதிக்கின்ற நூலறிவினையுடைய, புலவோர் = புலவர்களாகிய மேகங்கள், கவி மழை சிந்தக்கண்டு = கவியாகிய மழையைப் பொழியக் கண்டு, களிக்கும் = மகிழ்கின்ற, கலாபம் மயிலே = தோகையையுடைய மயிலின் சாயல் போன்றவளே!, சகல கலா வல்லியே = சகல கலைகளாகிய

மலர்கள் அலர்ந்த கொடிபோன்றவளே!, அளிக்கும் = (நின்னால்) அருளப் பெறும், செழும் தமிழ் தெள் அமுது = வளமை மிகுந்துள்ள தமிழாகிய தெளிந்த அமுதத்தை, ஆர்ந்து = (நிறைய) உண்டு, உன் அருள் கடலில் = உனது திருவருளாகிய கடலின் கண், குளிக்கும் படிக்கு = மூழ்கும்படிக்கு, என்று கூடும் கொலோ = (அடியேனுக்கு) எப்பொழுது வாய்க்கப்பெறும்?

விளக்கவுரை:-

செழுந்தமிழ்—இலக்கண அமைதியோடு மற்றைய மொழிகள் தனக்கு இணையாகாது நிற்கும் செவ்விய தமிழ் மொழி; செந்தமிழுமாம். செந்தமிழ்—பாண்டிய நாட்டில் வழங்கும் தமிழ். மற்றைய தென்பாண்டி, குட்டம், குடகு, கற்கா முதலிய நாடுகளில்வழங்கும் தமிழ் கொடுந்தமிழாம். அருட்கடலில் குளித்தல்—கலைமகளின் திருவருளுக்குப் பாத்திரனாதல். கடல் எல்லையற்றதற்கு உவமை. மழையைக் கண்டு மயில் களித்தல் இயல்பு ஆதலால், "புலவோர் கவிமழை சிந்தக்கண்டு களிக்கும் மயிலே" என்றார். புலமை—தேர்ந்த அறிவு; அதனையுடையவர் புலவர். அமுது—அமிர்தம். கலாபம் = தோகை. குளித்து உண்ணல் வழக்கமாயிருக்க இங்கே உண்டு குளித்தலை விரும்பியது ஒருநயம்.

இலக்கணக்குறிப்பு:—

அருட்கடல், கவிமழை—உருவகம். என்று காலத்தையும் வினாவையும் காட்டும் இடைச்சொல். மயில் உவமையாகு பெயர். கொல், ஐயம். உளம், உள்ளம் என்பதன் தொகுத்தல். கொலோ ஓ அசை. தெளிக்கும்—தெளியும் என்பதன் பிறவினையான பெயரெச்சம்; ககரம் இரட்டித்து வந்தது. புலமை + அர் =

புலவர்; புலவர் என்றதன் ஈற்றயல் அகரம் ஓகாரமாகத் திரிந்து புலவோர் என நின்றது. கவியை மழையாகவும், கலைமகளை மயிலாகவும் உருவகப்படுத்தியதற்கு ஏற்ப, புலவரை மேகங்களாக உருவகப்படுத்தாதுவிட்டமையால், இஃது ஏகதேச உருவக அணி. (ரு)

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

இ-ள். வடநூல் கடலும் = வடநூலாகிய கடலும், தேக்கும் = (சுவை) நிறைந்த, செழும் தமிழ் செல்வமும் = வளப்பமுள்ள தமிழ் நூலாகிய செல்வமும், தொண்டர் = (நின்) அன்பர்களின், செம் நாவில் = செவ்விய நாவில், நின்று = நிலைத்திருக்கும்படி, காக்கும் = பாதுகாக்கின்ற, கருணைக் கடலே = கருணையாகிய கடல் போன்றவளே!, சகல கலா வல்லியே = சகல கலைகளாகிய மலர்கள் அலர்ந்த கொடிபோன்றவளே!, தூக்கும் = ஆராய்தற்குரிய, பனுவல் துறை = (தமிழ்) நூல்களின் பாகுபாடுகளிலே, தோய்ந்த = படிந்த, கல்வியும் = (செயற்கை) அறிவும், சொல் சுவை தோய் = சொற்சுவை பொருந்தும் படி (கவியியற்றும்), வாக்கும் = (இயற்கை) அறிவும், பெருக = மேன்மேலும் உண்டாகுமாறு, பணித்தருள்வாய் = (நீ அடியேனுக்குக்) கட்டளையிட்டருளுவாயாக.

விளக்கவுரை:-

செந்நா, உண்மை பேசும் நா. கருணை, தொடர்பு பற்றாது உயிர்களிடத்து உண்டாகும் அன்பு. தொண்டு =அடிமை; அதனைப் புரிபவர் தொண்டர். பனுவல்துறை —அகப்பொருள், புறப்பொருள் நூல்களிலுள்ள பாகுபாடுகள். இதனை, "தீந்தமிழின் துறைவாய் நுழைந்தனையோ" எனவரும் திருச்சிற்றம்பலக் கோவையார் அடியானுமுணர்க.

பிறமொழிகளோடு ஒப்புநோக்க உயர்வும், விரிவும், ஆழமும், நுண் பொருளும், தூய்மையும் உடைமைபற்றி வடநூலைக் கடல் என்றும், அக்கடல்படு செல்வங்களை யெல்லாம் ஒருங்கே தன்னிடத்துக் கொண்டு, மக்கட்கு உறுதி பயப்பதால், தமிழ் மொழியைத் தமிழ்ச் செல்வம் என்றும் கூறினார். வடமொழி, தென்மொழி ஆகிய இவைகள் இந்துதேச மொழிகள் பலவற்றிற்கும் தாய்மொழி ஆதலின் இவ்விரண்டையுமே ஆசிரியர் கூறினார். கலைமகள் பிரமதேவன் நாவிலே அன்றிக் கற்றோர் நாவிலும் வீற்றிருத்தலால் அவள் 'நாமகள்' எனப்பெயர் பெற்றாள்.

இலக்கணக்குறிப்பு:—

தூக்கும் பெயரெச்சம். கல்வியும், வாக்கும், கடலும், செல்வமும், உம் எண்ணும்மைகள். செழுமை+ தமிழ்=செழுந்தமிழ். செம்மை+நா=செந்நா; பண்புத் தொகை. தொண்டர் பண்பினடியாகப் பிறந்த பெயர். கருணைக்கடல் உருவகம். (௪)

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

இ-ள். நெடும் தாள் = (நீர்மிகுதியினால்) உயர்ந்த தண்டினை யுடைய, கமலத்து = தாமரை மலரில் (வீற்றிருக்கும்), அஞ்சம் துவசம் உயர்த்தோன் = அன்னக் கொடியை உயர்த்திய பிரம தேவனது, செந்நாவும் = செவ்விய நாவின் கண்ணும், அகமும் = (அவனுடைய) மனத்தின் கண்ணும், வெள்ளைக் கஞ்சம் தவிசு ஒத்து = வெண்டாமரை மலராகிய ஆசனத்தை நிகர்க்க, இருந்தாய் = வீற்றிருக்கின்றவளே!, சகல கலா வல்லியே = சகல கலைகளாகிய மலர்கள் அலர்ந்த கொடிபோன்றவளே!, பஞ்சு அப்பு = செம்பஞ்சுக் குழம்பு ஊட்டப்பெற்ற, இதம் தரு = (அன்பர்களுக்கு) நன்மையைத் தருகின்ற, செய்ய = சிவந்த, பொன் பாதம் பங்கேருகம் = அழகிய (உன்) திருவடித் தாமரைமலர், என் நெஞ்சம் தடத்து = என் மனமாகிய தடாகத்தில், அலராதது என்? = மலராததற்குக் காரணம் யாது? (அடியேனுக்கு அறிவித்தருள் புரிவாயாக).

விளக்கவுரை

பஞ்சு அப்பு பாதம், இதம் தரு பாதம், செய்ய பாதம், பொன்பாதம் என்க. பெண்களின் பாதங்களுக்கு அழகும் குளிர்ச்சியும் தரும் பொருட்டுச் செம்பஞ்சுக் குழம்பு

பூசுதல் மரபு ஆதலால் பஞ்சு அப்பு பாதம் என்றார். அன்பர்கள் எண்ணியதை எண்ணியாங்கு நல்கும் பாதம் ஆதலால் இதம்தரு பாதம் என்றார். பங்கேருகம்—சேற்றில் உற்பத்தியாவது; தாமரை. கமலம்—தண்ணீரை அலங்கரிப்பது; தாமரை. கம்—தண்ணீர், கஞ்சம்—தண்ணீரில் உற்பத்தியாவது; தாமரை. மிகுந்த நீரில் மலர்ந்த கமலம் என்பார் நெடுந்தாட் கமலம் என்றார். பிரமனுடைய நா வேதம் பயின்ற நா ஆதலின் செந்நா என்றார். அட்புதல்—ஊட்டுதல்; பூசுதல். அன்னம் பிரமனுக்குக் கொடியாக விளங்குவதன்றி ஊர்தியுமாகும்.

இலக்கணக்குறிப்பு:—

ஹம்ஸம் என்னும் வடசொல் அஞ்சம் எனத் தற்பவமாயிற்று. நெடுந்தாள், செந்நா—பண்புத் தொகைகள். உயர்த்தோன், இருந்தாய்—வினையாலணையும் பெயர்கள். நெஞ்சத் தடம், கஞ்சத் தவிசு-உருவகம். நாவும், அகமும், உம்—எண்ணும்மை. என்னே, என்—வினு. ஏ—அசை. என்நெஞ்சம்—ஆறும் வேற்றுமைத்தொகை. இருந்தாய்—காலவழுவமைதியுமாம். (ரு)

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

இ-ள். எழுதா மறையும்=வேதப்பொருளிலும், விண்ணும் =ஆகாயத்திலும். புவியும்=பூமியிலும். புனலும்=நீரிலும், கனலும்=நெருப்பிலும், வெம் காலும்=கொடிய காற்றிலும், அன்பர் கண்ணும்=அன்பருடைய கண்களிலும். கருத்தும்=மனத்திலும், நிறைந்தாய்=நிறைந்து நிற்கின்றவளே!, சகல கலா வல்லியே=சகல கலைகளாகிய மலர்கள் அலர்ந்த கொடி போன்றவளே!, பண்ணும்=இசைத்தமிழும், பரதமும்=நாடகத் தமிழும், கல்வியும்=இயற்றமிழும், தீம் சொல் பனுவலும்= இனிய சொற்களாலமைந்த கவிகளும். யான் எண்ணும் பொழுது=நான் விரும்புங் காலத்து, எளிது எய்த=எளிதில் அடையுமாறு, நல்காய்—(நீ) அருள்புரிவாயாக.

விளக்கவுரை:-

பண்—பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என நால் வகைப்பண்ணுமாம். பரதம்—நடன முதலியவற்றை யுணர்த்தும் நூலுமாம்; பரதம்—(நாட்டியம்) பாவம், இராகம், தாளம் ஆகிய இவற்றோடு கூடியது. பனுவல்— நூலுமாம். அன்பர்கண்ணும் கருத்தும்—அன்பரது காட்சியிலும் தியானத்திலும் எனினுமாம். கன்னபரம்பரையாய் ஆசிரியர் சந்தை சொல்ல மாணவர் கற்பதால் வேதத்தை எழுதாமறை என்றார்; இதனை, "ஆற்ற லழியுமென் றந்தணர்கள் நான்மறையைப், போற்றியுரைத் தேட்டின் புறத் தெழுதார்" எனவரும் திருவள்ளுவமாலை அடிகளானும் உணர்க. இக்கருத்துப் பற்றியே வேதம் எழுதாக்கிளவி, சுருதி எனப் பல பெயர்களைப் பெற்றது. மறை—மறைந்த (இரகசியப்) பொருளையுடையது; வேதம்.

வெம்மையைக் கனலுக்குக் கூட்டி உரைப்பினும் அமையும். கலைமகள் வேதம், பஞ்சபூதம், அன்பருடைய

கண், கருத்து ஆகிய இவ்விடங்களில் விளங்குகிருள் என்பதை இங்குக் குறிப்பதால் அவள் எங்கும் நீக்கமற நிறைகின்ற தெய்வம் என்பது பெறப்படும். இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் இம்மூன்றும் முத்தமிழ் எனப்படும். இயற்றமிழ்—எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் இலக்கணம் ஐந்துந் தழுவிவருவது. இசைத்தமிழ்—சுருதி, சுரம், வண்ணம் என்னும் மூன்றையும் தழுவிவருவது. நாடகத்தமிழ்—இயலிசைகளோடு தாளம், அபிநயம், அணி, சுவை என்னும் நான்கையுந் தழுவிவருவது. இச்செய்யுளில் ஆசிரியர் முத்தமிழ்க்கல்வியும், கவித்துவமும் வேண்டுமென்று விரும்புகின்ருர்.

இலக்கணக்குறிப்பு:—

எழுதா—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். தீம்—(இனிமை) பண்புப்பெயர். நல்காய்—முன்னிலை ஏவல்வினைமுற்று. (சு)

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

இ-ள். தொண்டர்=அன்பர், உளம் கொண்டு=(தமது) மனத்தினுல் ஆராய்ந்து, தீட்டும்=எழுதுகின்ற, கலைத் தமிழ்

=தமிழ்நூலாகிய, தீம்பால் அமுதம்=இனிய பாலையும் நீரை யும், தெளிக்கும் வண்ணம்=(வெவ்வேருகப்) பிரித்தறியும் விதத்தை, காட்டும்=(உலகத்தார்க்குக்) காட்டுகின்ற, வெள் ஓதிமப் பேடே=வெண்மையாகிய அன்னப்பெடை போன்ற வளே!, சகல கலா வல்லியே=சகல கலைகளாகிய மலர்கள் அலர்ந்த கொடிபோன்றவளே!, பாட்டும்=செய்யுளையும், பொரு ளும்=(அச்செய்யுளின்) கருத்தையும், பொருளால் பொருந்தும் =அக்கருத்தினுல் பெறப்படும், பயனும்=அறம் பொருள் இன் பம் வீடு என்ற நாற்பயனையும், என்பால் கூட்டும்படி=என் னிடத்திலே சேர்க்கும் வண்ணம், நின் கடைக்கண் நல்காய்= உன்கடைக்கண் பார்வையை (அடியேனுக்கு) அருளுவாயாக.

விளக்கவுரை:-

கடைக்கண்—கிருபாநோக்கம். அமுதம்—நீர். ஓதிமம் —அன்னம். பேடு—பெண்பறவை: பெடை பேடை எனவும் வழங்கும். தொண்டர் ஈண்டுப் புலவர்களைக் குறிக்கும். அன்னம் பாலையும் நீரையும் பிரித்துண்ணும் வன்மையுடையது போல, கலைமகளும் உலக நூலையும், வீட்டு நூலையும் பிரித்துணர்த்தும் இயல்புடையவள்; ஆதலால் தீம்பா லமுதம் தெளிக்கும் வண்ணம் காட்டும் வெள்ளோதிமப் பேடு என்ருர். இங்கே கலைமகளை அன்ன மாக உருவகம் செய்தார். இதனை,

"வெண்டோ டவிழ்த்த முண்டகத் தவிசில்
பானீர் பிரித்துண் டுவெள் ளெகினம்
நூற்பெருங் கடலு ணுண்பொரு டெரித்து
ஈாற்பயன் கொள்ளு நாமகட் பொருவும்"

எனவரும் திருவாரூர் நான்மணிமாலை யடிகளானும் உணர்க. உலக நூலுக்கு நீரும், வீட்டு நூலுக்குப் பாலும்

உவமை. இச்செய்யுளில் ஆசிரியர் பாட்டை இனிமையோடு வாசிக்கவும், அதன் கருத்தையும் பயனையும் எளிதில் அறிந்து கொள்ளும் வன்மையும் அளிக்கவேண்டு மென்று விரும்புகின்றார்.

இலக்கணக்குறிப்பு:—

என்பால் பால்—ஏழனுருபு. கடைக்கண்—இலக் கணப்போலி. வெண்மை + ஓதிமம்—வெள்ளோதிமம். பால முதம்—உம்மைத் தொகை. வெள்ளோதிமம்—இனமில்லா அடை. (எ)

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

இ-ள். என்று ஒரு காலமும் = எக்காலத்திலும், சிதையாமை = அழியாதபடி, நல்கும் = வழங்குகின்ற, கல்வி பெரும் செல்வம் பேறே = கல்வியாகிய பெரிய செல்வத்தின் பயன் போன்ற வளே!, சகல கலா வல்லியே = சகல கலைகளாகிய மலர்கள் அலர்ந்த கொடிபோன்றவளே!, சொல் விற்பனமும் = (பலர் விரும்புமாறு பேசும்) சொற் சாதுரியமும், அவதானமும் = அவ தானசக்தியும், கல்வி சொல்ல வல்ல = (பிறர்க்குக்) கல்வி கற்

பிக்க வல்ல, நல் வித்தையும் = சிறந்த ஆற்றலும், தந்து = (அடியேனுக்கு) அளித்தருளி, அடிமை கொள்வாய் = தொண்டனுக்கிக் கொள்வாய்; (இவ்வாறு நீ அருள்புரிதல்) நளினம் ஆசனம் சேர் = (செந்) தாமரை மலராகிய ஆசனத்தில் எழுந்தருளியிருக்கின்ற, செல்விக்கு = இலக்குமிக்கும், அரிது = அரியதாகும்.

விளக்கவுரை:-

சொல்விற்பனம்—எடுத்துச் சொல்லும் ஆற்றல்; நாவன்மை. அவதானம்—ஒரே காலத்தில் வினவும் எட்டு, பத்து, பதினறு முதலிய வினக்களுக்கு விடை அறிந்து சொல்லுதல்; அதாவது ஒரே சமயத்தில் பலவகைத் துறைகளில் கருத்தைச் செலுத்துதல்; ஞாபகசக்தி. எட்டு, பத்து, பதினறும் முறையே அட்டாவதானம், தசாவதானம், சோடசாவதானம் எனப்பெயர் பெறும். செல்வி—செல்வத்தைக் கொடுக்கும் தேவதை; இலக்குமி. பேறு—வேண்டிப் பெறப்படுவன. புருஷார்த்தம்; அஃது அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்காம்.

கல்விச்செல்வம், பொருட்செல்வம் போல அழியாமல் உயிர் பிறக்கும் பிறப்பு தோறும் சென்று உதவிபுரிவதால், சிதையாமை நல்கும் கல்வி என்ருர். இதனே,

“ ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து ”

எனவரும் திருவள்ளுவர் வாக்கானும் உணர்க. கல்விப் பெருஞ் செல்வத்தினேப் பொய்யா மொழியார்,

கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

என்ருர்.

அழியும் தன்மையையுடைய பொருட் செல்வத்தை அளிக்கும் திருமகள் போலாது, அழியாத தன்மை வாய்ந்த கல்விச் செல்வத்தை அளிப்பவள் கலைமகள் என்பது பின்னிரண்டடியின் பொருள்.

இலக்கணக்குறிப்பு:—

செல்வி—செல்வன் என்பதன் பெண்பால். நளின+ஆசனம்—நளினாசனம்; தீர்க்கசந்தி. தந்து—வினையெச்சம். அரிது—குறிப்பு வினைமுற்று. சிதையாமை—எதிர்மறை வினையெச்சம். பெருமை+செல்வம்—பெருஞ்செல்வம். செல்விக்கு என்பதில் உயர்வு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. (அ)

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

இ-ள். நிலம் தோய்=பூமியில் தொடுகின்ற, புழைக்கை=துதிக்கையினை உடைய, நல் குஞ்சரத்தின் பிடியோடு=சிறந்த பெண் யானையுடன், அரசு அன்னம்=அரச அன்னமும், நாண=நாணும் படி, நடை கற்கும்=நடையினைப் பழகுகின்ற, பதம் அம்புயத்தாளே=செந்தாமரை போன்ற திருவடியை யுடைய வளே!, சகல கலாவல்லியே=சகல கலைகளாகி மலர்கள்

அலர்ந்த கொடிபோன்றவளே!, சொற்கும்=சொல்லுக்கும், பொருட்கும்=பொருளுக்கும், உயிர் ஆம்=உயிராக இருக்கும், மெய் ஞானத்தின்=உண்மை அறிவின், தோற்றம் என்ன=வடிவம் என்று சொல்லும்படி, நிற்கின்ற=விளங்குகின்ற, நின்னை=உன்னை, நினைப்பவர் யார்=நினைக்கும் வல்லமை யுடையவர் யாவர்? (உன்னடியார் அன்றி மற்றொருவருமிலர்; ஆதலால் அடியேனுக்கு அருள் புரிவாயாக).

விளக்கவுரை:-

குஞ்சரம்—குஞ்சத்தினை யுடையது; யானை. குஞ்சம்—தந்தம். பிடி—பெண்யானை. அரசு அன்னம்—சிறப்பு வாய்ந்த அன்னம். அம்புஜம்—அம்புயம்; நீரில் தோன்றுவது; தாமரை. அம்பு—நீர். மெய்ஞ்ஞானம்—பேரறிவு. சொல், பொருள் ஆகிய இவ்விரண்டையும் அறிவதற்குக் கருவி உண்மையறிவு ஆதலால், சொற்கும் பொருட்கு முயிரா மெய்ஞ்ஞானம் என்றார். கலைமகள் ஞானவடிவினள் ஆதலால், அவளை மெய்ஞ் ஞானத்தின் தோற்ற மென்ன நிற்கின்ற நின்னை என்றார். நாமகள் அன்பர்க்கன்றி மற்றவர்க்கு மனத்தினாலும் நினைத்தற்கு அரியவள் என்பார், "நின்னை நினைப்பவர் யார்" என்றார். யானையின் உத்தம இலக்கணங்களில் துதிக்கை நிலம் தோய்தல் ஒன்று. இதனை "ஈர்ந்துநிலந் தோயு மிரும்பிடித் தடக்கையின்" எனவரும் சிறுபாணாற்றுப்படையின் அடியினாலுணர்க.

இலக்கணக்குறிப்பு:—

ஞானத்தின், குஞ்சரத்தின் என்பன அத்து, இன் சாரியைகள். நினைப்பவர் வினையாலணையும் பெயர். தோய்புழைக்கை வினைத்தொகை. பிடியோடு, ஓடு எண்ணிடைச் சொல். (கூ)

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பி லுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.

இ-ள். சகல கலா வல்லியே=சகல கலைகளாகிய மலர்கள் அலர்ந்த கொடிபோன்றவளே!, படைப்போன் முதல் ஆம்= படைக்கும் தொழிலையுடைய பிரமன் முதலாகிய, விண் கண்ட தெய்வம்=விண்ணுலகத்தைத் தமக்குரிய இடமாகக் கொண்ட தெய்வங்கள், பல் கோடி=பல கோடிகள், உண்டு எனும்= உள்ளன எனினும், விளம்பில்=(ஆலோசித்துச்) சொல்லு மிடத்து, உன்போல்=உன்னைப்போல, கண்கண்ட தெய்வம்= பிரத்தியட்சமாகப் பயன்தரும் தெய்வம், உளதோ=(வேறு) இருக்கின்றதோ? (இல்லை; ஆதலால், நீ), மண்கண்ட=உலக முழுவதும் நிழற்றிய, வெண்குடைக் கீழாக=வெண்கொற்றக் குடையின்கீழ் இருந்து, மேற்பட்ட=சிறப்புப்பெற்ற, மன் னரும்=அரசரும், என் பண் கண்ட அளவில்=எனது இசை நிறைந்த பாட்டைக் கேட்டவுடன், பணியச் செய்வாய்=(என்னை) வணங்கும்படி அருள் செய்வாயாக.

விளக்கவுரை:-

மண்கண்ட—உலகத்தவராற் காணப்படுகின்ற எனினுமாம். பண் ஈண்டுச்செய்யுள். விண்—தேவலோகம் பல்கோடி—அளவற்ற எண்ணிக்கை. மன் பெருமை;

அதனையுடையவர் மன்னர். வெண்குடைக்கீழ் இருந்து மண் ஆளுதல்—தன்னுட்சிக் குட்பட்ட மக்கள் பலரும் சகல இன்பத்துடன் வாழுமாறு பாதுகாத்தல்.

ஈண்டு ஆசிரியர் பாதுஷாவாகிய மன்னனின் அன்பைப் பெறவேண்டுமென்னும் விருப்பத்தைக் குறிப்பிக்கும் பொருட்டு மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமேன், பண் கண்டளவிற் பணியச் செய்வாய் என்றார். வெற்றிக்கு வெண்மை அடையாளம் ஆதலின் வெண்குடை என்றார். கலைமகள் தன் வேண்டுகோளுக்கு இரங்கித் தரிசனம் தந்து அருள்புரிந்ததனால், அவளை மற்றெல்லாத் தெய்வங்களைக் காட்டிலும் சிறந்தவள் என்பார் கண்கண்ட தெய்வம் என்றார்.

இலக்கணக்குறிப்பு:—

மண் கண்ட, பண் கண்ட, விண் கண்ட இவைகள் விகாரத்து இயல்பாயின. வெண்மை+குடை–வெண்குடை மேன்பாடு+அ—மேற்பட்ட; பெயரெச்சம். கண்ட+ அளவில்—கண்டளவில்; அகரம் தொகுத்தல். விண் இடவாகுபெயர். உளதோ, ஓ எதிர்மறை. கீழாக மேற்பட்ட மன்னர் இங்கு மாறுபட்ட சொற்கள் வந்ததனால் முரண் தொடை. (ம)

சகல கலா வல்லி மாலை

முற்றிற்று.

ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமபுரம்.

"சகல கலா வல்லி மாலை"

வேண்டுவோர் விலை ரூ. 0—1—0 தபால் சார்ஜ் 0—0—9 ஆக ரூ. 0—1—9 முன்பணமனுப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

கிடைக்குமிடம்:—

நூல்நிலையப்பரிசோதகர்,
தருமபுர ஆதீனம்
தருமபுரம், மாயவரம்.

ஷராப்,
ஸ்ரீ கம்பஹரேசுவரசுவாமி
தேவஸ்தான ஆபீஸ்,
திருபுவனம்.
(கும்பகோணம் தாலூகா)